பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 29 (11—5—68) சனி ★ வெளியூர்: சித்திரை 30 (12—5—68) ஞாயிறு [இதழ்: 274

## இந்தியாவின் உணவுப் பிரச்சினை

### அண்ணாவின் நம்பிக்கை

ஹாங்காங், மே 10—

"இந்தியா, தனது உணவுப் பிரச்சினையைத் தீர்க்கும் நிலையில் இருக்கிறது; 1970-ல், இப்பிரச்சினை தீர்ந்துவிடும்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஹாங்காங்கில் தந்துள்ள பேட்டி ஒன்றில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

# தமிழகத்தைத் தலைசிறந்த மாநிலமாக்குவோம்

## தொழில் வளம் பெருக அயல்நாட்டு உதவிகள் கிட்டும்

### உலகச் சுற்றுப்பயணம் தரும் நன்னம்பிக்கை-- ஹாங்காங்கில் அறிஞர் அண்ணா பேட்டி

ஹாங்காங், மே 10—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தமது உலகச் சுற்றுப்பயணத்தின் இறுதிக் கட்டமாக இன்று இங்கு வந்து சேர்ந்தார்கள்.

**அண்ணா வந்திறங்கியதும், அவரை வரவேற்கக் குழுமியிருந்த இந்திய மக்களும், தமிழர்களும், 'வாழ்க அண்ணா' என்று தமிழில் முழக்கம் எழுப்பினர்.**

தமது உலகச் சுற்றுப்பயணத்தின் பலனாகத் தமிழ்நாட்டில் உருக்குத் தொழில்களை நிறுவவும், மீன் பிடித் தொழிலை மேம்படுத்தவும், வேளாண்மைத் தொழிலை நல்ல பயனுள்ளதாக்கவும் தக்க வகையில் முதலீடுகள் செய்வதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதாக அண்ணா அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

**"தமிழகத்தை இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாக்க முடியுமென நம்புகிறேன்; இந்திய அரசுக்குக் குந்தகம் எதுவும் விளையாத வகையில் இந்தக் குறிக்கோளை அடைய முயற்சி செய்வோம்" என்றார் அண்ணா.**

அமெரிக்காவிலும், ஜப்பானிலும் மிகவும் பயனுள்ள பேச்சுக்கள் நடத்தியதாகவும், இதன் விளைவாக தமிழ்நாட்டுக்கு அயல்நாட்டு மூலதனம் விரைவில் கிடைக்கும் என நம்புவதாகவும் அண்ணா அவர்கள் கூறினார்கள்.

நாளை பிற்பகல் அண்ணா அவர்கள் சிங்கப்பூருக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

### 'பயனுள்ளதாகப் பயணம் அமைந்ததா?'

தமது அமெரிக்கப் பயணமும் ஜப்பான் பயணமும் தமக்கு மிகவும் ஊக்கமளித்திருப்பதாக அண்ணா கூறினார்.

'பயணம் பயனுள்ளதாக அமைந்ததா?' என்று நிருபர்கள் கேட்டதற்கு, 'நான் மகிழ்ச்சியில் அமிழ்ந்திருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா?' என்று கேட்டார் அண்ணா.

### ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு!

"ஜப்பானில், வணிகத்துறையினரும் — அரசு அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் மிகவும் ஒத்துழைப்பதைக் கண்டேன்" என அண்ணா கூறினார்.

### முன்னேட்டப் பேச்சு முன்பே நடந்தது

"ஜப்பானில், சேலம் இரும்பாலை அமைப்புப் பற்றியும், மீன் வளத் திட்டம் பற்றியும், வேளாண்மைத் திட்டங்கள் பற்றியும் மீன்பிடிப் படகுகள் பற்றியும் பேசினேன்" எனக் கூறினார்.

"இவை சம்பந்தமாக முன்னேட்டப் பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே நடந்திருக்கின்றன" என்றும் கூறினார்.

### மத்திய அரசிடம் தெரிவிப்பேன்!

"இத்திட்டங்கள் பற்றிய என்னுடைய எண்ணத்தை மத்திய அரசிடம் தெரிவித்து திட்டங்களைப் பற்றி முடிவு செய்யுமாறு மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளவிருக்கிறேன்" என்றும் தெரிவித்தார்.

### விருப்பத்தை மட்டுமே தெரிவிக்க இயலும்!

"ஜப்பானுடன் எந்தவித ஒப்பந்தத்திலும் நான் கையெழுத்திட விரும்பவில்லை" என்று கூறிய அண்ணா அவர்கள், 'எங்கள் அரசு ஒரு கூட்டாட்சி அரசாகும்; மத்திய அரசுக்கு எங்கள் விருப்பத்தைத்தான் தெரிவிக்கலாம்" என்று கூறி விளக்கினார்.

### முயற்சியைக்கைவிட்டு நெடுநாளாகிறது!

"நீங்கள் இப்போது தனித் 'திராடநாடு' கேட்கவில்லையா?" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, அண்ணா சிரித்துக்கொண்டே, 'நான் அந்த முயற்சியைக் கைவிட்டு நெடுங்காலமாகிறது' என்று பதிலளித்தார்.

### வரவேற்பு----விருந்தளிப்பு

இன்று மாலை, தற்காலிக இந்தியத் தூதுவரான திரு. ஏ. கே. தாஸ், அண்ணாவுக்கு தமது இல்லத்தில் ஒரு வரவேற்பளித்தார்.

முதல் செயலாளர் திரு. சீனிவாசன் ஒரு விருந்தளித்தார்.

## தனி பஸ் வசதி

உலகச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு மே 12-ஆம் நாள் இரவு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேரும் அறிஞர் அண்ணா அவர்களை வரவேற்பதற்குச் செல்லும் மக்களுக்கு வசதியாக இருக்கும் பொருட்டு தனி பஸ்கள் விடுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நகரின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் மீனம்பாக்கம் விமான நிலையம் செல்வதற்கும், அங்கிருந்து மீண்டும் நகருக்குத் திரும்புவதற்கும் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினரால் தனி பஸ்கள், போதுமான அளவுக்கு விடப்படும்.

## வழிநெடுகிலும் வளைவுகள்

அறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாட்டுப்பயணம் முடிந்து திரும்பி வருவதையொட்டி மே 13-ம் நாள் நடைபெறவிருக்கும் மாபெரும் ஊர்வலம் செல்லும் பாதையில் வரவேற்பு வளைவுகள் அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தலைமைக் கழக ஆலோசனைப் படி, ஊர்வலப் பாதையில் மாநகராட்சி தி.மு.க உறுப்பினர்கள் வரவேற்பு வளைவுகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## விமானப் பந்தல்!

சைதை மர்மலாங் பாலத்திற்கு அருகில் அண்ணாவை வரவேற்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

விமானம்போன்ற பந்தல் போடப்படுகிறது. அதிர்வேட்டுகள் முழங்க—வாண வேடிக்கைகளுடன் அண்ணா வரவேற்கப்படுவார்.

இதற்கான ஏற்பாடுகளை துணை மேயர் பவளவண்ணன் ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி. ஆகியோர் செய்துவருகிறார்கள்.

இங்கு நடைபெறுகிற வரவேற்பு நிகழ்ச்சி, முரசொலி மாறன் எம்.பி. தலைமையில் நடைபெறும்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வரும் வட்டக் கிளை உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், தாரை தப்பட்டை முதலிய இசைக் கருவிகளுடன் வந்து கலந்துகொள்ளுமாறு சைதை சம்பந்தம் கேட்டுக் கொள்கிறார்.

## சைதை வட்டத் தோழர்கள் வரவேற்பு

மீனம்பாக்கம் விமானநிலையத்தை அடுத்துள்ள பழவந்தாங்கல், நங்கநல்லூர், மீனம்பாக்கம் தோழர்கள், 12-ந்தேதி இரவு சென்னை வரும் அறிஞர் அண்ணாவை வரவேற்க மாபெரும் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள்.

## காஞ்சியில் வரவேற்பு

மே 14-ம் நாளன்று காஞ்சியில் மகத்தான வரவேற்பளிக்க ஏற்பாடாகியிருக்கிறது.

# திக்கெட்டும் புகழ் பரப்பித் திரும்புகிறார் அறிஞர் அண்ணா

## தானைத் தலைவரை வரவேற்க தாயகத்தோரே--- வாரீர்!

### ஊர்வலம் செல்லும் வழியெல்லாம் விழாக்கோலம் பூணட்டும்!

### தலைநகர் தரவிருக்கும் மகத்தான வரவேற்பு-- மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

"பேரறிஞர் அண்ணா அவர்கள், உலகச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 12-ந் தேதி ஞாயிறு அன்று இரவு 10-மணிக்கு வந்து சேருகிறார்கள்.

"விமான நிலையத்தில் அண்ணா அவர்களுக்கு மாபெரும் வரவேற்பளிக்கப்படும்; நகரிலுள்ள கழகத் தோழர்கள் பல்லாயிரக் கணக்கில் — கழகக் கொடிகளுடன்— திரண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"அடுத்து 13-ந்தேதி திங்கட்கிழமை பிற்பகல் 3-மணிக்கு தேனும்பேட்டை 'அன்பகத்'திலிருந்து மாபெரும் ஊர்வலம் துவங்குகிறது.

"மவுண்ட்ரோடு வழியாக ஊர்வலம் சென்று ரவுண்டானாவிலிருக்கும் அண்ணா சிலையைச் சுற்றி, வாலாஜாரோடு— திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை—பைகிராப்ட்ஸ் ரோடு வழியாக திருவல்லிக்கேணி கடற்கரையை அடையும்.

"ஊர்வலம் செல்லும் வழியெங்கும் கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்க வேண்டிய ஏற்பாடுகளில் ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் முனைந்து செயலாற்ற வேண்டுகிறேன்.

"சிறப்பான முறையில் வரவேற்பு வளைவுகள் அமைத்திடக் கழகத் தோழர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

"ஊர்வலம் முடிந்தவுடன், திருவல்லிக்கேணி கடற்கரையில்— தலைமைக் கழகத்தின் சார்பில்— பாராட்டுப் பொதுக் கூட்டம் நடைபெறும்; இக்கூட்டத்தில் தமிழக அமைச்சர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு பாராட்டுரை வழங்குவர்.

"ஊர்வல நிகழ்ச்சியினையும், பொதுக் கூட்டத்தையும் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக ஆக்கிடும் வகையில் கழகத் தோழர்களும், பொதுமக்களும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்."

என, அறிக்கை ஒன்றில் மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

## டெல்லிக்கு அண்ணா வருகை

மே 12 (ஞாயிறு) அன்று இரவு சென்னை வந்து சேரும் அண்ணா அவர்கள், மே 16-ம் நாள் டெல்லியில் வணிகத் துறை அமைச்சரைச் சந்தித்து, பஞ்சாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து விவாதிக்க இருக்கிறார்.

அதன் பிறகு தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

### மேலவைத் தேர்தல்

## இரா. சாம்பசிவம் வெற்றிபெற்றார்

தமிழகச் சட்டமன்ற மேலவைக்குத் தென்னாற்காடு—வட ஆற்காடு மாவட்ட உள்ளாட்சி மன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் குறிஞ்சிப்பாடி இரா. சாம்பசிவம் வெற்றிபெற்றார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 29 (11—5-68) சனி

# அந்தப் பண்பும் இந்தப் பண்பும்

சென்னை நகரத்தில் மே நாள் விழாவைக் காங்கிரசுக் கட்சி தனித்து நின்று நடத்தியிருக்கிறது. கழகம் உட்பட மற்ற அரசியல் கட்சிகளுடன் கூட்டாகச் சேர்ந்து மே விழாக் கூட்டத்தை நடத்தக் காங்கிரசுக் கட்சி விரும்பவில்லை. ஏன் விரும் வில்லை என்பதற்கான காரணம் வெளிப்படை.

தான் முன்னின்று நடத்திய மே விழாக் கூட்டத்தின் முன் பகுதியாக, ஊர்வலம் ஒன்றையும் காங்கிரசுக் கட்சி நடத்தியிருக்கிறது.

அந்த ஊர்வலம், காமராசர் சிலையின் அருகிலிருந்து புறப்பட்டது. ரவுண்டாணவிலுள்ள அண்ணா அவர்களின் சிலையை ஊர்வலம் நெருங்கியதும், ஊர்வலத்தில் சென்ற சிலர், அண்ணாவின் சிலையை உடைக்க சிலைக்கு அருகில் ஓடினர். ஆனால், அங்கு காவல் இருந்த காவல்துறையினர், சிலையை நெருங்கவிடாமல் அக்குண்டர்களைத் தடுத்துவிட்டனர்.

காங்கிரசு ஊர்வலம் என்றால், அரசியலில் மாறுபட்ட கருத்தினரை—குறிப்பாகக் கழகத்தைச் சேர்ந்தவர்களை—கழகத்தவர்களின் சொத்துக்களைத் தாக்க--சேதப்படுத்த--சூறையாடத் திட்டமிட்டு செய்யப்படுகின்ற ஏற்பாடு என்பதுதான் பொருள். இந்த உண்மை, 'சுதந்தர நாள்' ஊர்வலம் எனப் பெயர் கூறிக்கொண்டு ஊர்வலமாக வந்த காங்கிரசுக் கட்சியினர், 'முரசொலி' அலுவலகத்தைத் தாக்கியதிலிருந்தும், 'குடியரசு நாள்' ஊர்வலத்தின்போது குறிப்பிட்ட கழகத்தவர் வீடுகளும், சார்பு மன்றங்களும் தாக்கப்பட்டதிலிருந்தும் தெளிவாகத் தெரிகிறது.

காங்கிரசுக் கட்சியினர் ஊர்வலம் நடத்துவதன் உண்மையைத் தெளிவாகத் தெரிந்திருந்த காவல்துறையினர்—காங்கிரசுக்காரர்கள் நடத்திய மே நாள் ஊர்வலத்தில் வன்முறைச் செயல்களை எதிர்பார்த்து—அண்ணாவின் சிலைக்கு அருகில் முன்னேற்பாடாகப் பாதுகாப்புச் செய்திருக்கின்றனர். இப்படிப் பாதுகாப்புச் செய்யப்படாமலிருக்கும்பட்சத்தில், அன்றையத்தினம் காங்கிரசுக்காரர்களின் கைவண்ணத்துக்கு அண்ணாவின் சிலை கண்டிப்பாக இலக்காகி இருக்கும்.

அறிஞர் அண்ணா அவர்களின் நல்லியல்பைத் தெரிந்தவர்கள்—கடந்த முப்பத்தைந்து ஆண்டுக்காலமாக அவர் தமிழக அரசியலில் புரிந்துவருகின்ற தூய்மையான அரசியல் பணியை அறிந்தவர்கள்—'மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கின்றார்' என்பதற்காக எவரையும் இழிவாகவோ, துச்சமாகவோ கருதாத அவருடைய பேருள்ளப் பெரும்போக்கை உணர்ந்தவர்கள், அண்ணா அவர்களைப் பகைவராகக் கருதவும்மாட்டார்கள்—வெறுக்க நினைக்கவும்மாட்டார்கள். இந்த நிலையில், அண்ணாவின் சிலையைச் சீரழிக்க, அவரை நன்கு உணர்ந்திருப்பவர்கள் முன்வருவார்களா ?

ஆனால், மே நாள் காங்கிரசு ஊர்வலத்தில் சென்ற சிலர் அண்ணாவின் சிலையைச் சீர்குலைக்க, அப்பெருந்தகையின் சிலையை நோக்கி ஓடினர் என்பதும், காவல் துறையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர் என்பதும் செய்திகளாகத் தரப்பட்டுள்ளன.

இத்தகைய வன்செயலை மேற்கொள்ளத் துணிந்த தமது கட்சியைச் சேர்ந்தவர்களை, அன்று கடற்கரையில் நடைபெற்ற காங்கிரசுப் பொதுக்கூட்டத்தில், காங்கிரசுக் குழுத் தலைவர் கண்டித்து இருத்தல் வேண்டும். அவர் செய்யத் தவறியிருந்தாலும், அதே மேடையில் பேசிய மற்ற மாபெரும் காங்கிரசுத் தலைவர்கள் கண்டித்திருத்தல் வேண்டும்.

ஆனால், தமது கட்சியைச் சேர்ந்த சிலரின் வன்செயலைக் கண்டிக்கின்ற சிறுசெயலை, காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மாபெரும் தலைவர்களிடம் எதிர்பார்க்கக்கூடாது—அப்படி எதிர்பார்ப்பது அறியாமையாகும்—என்ற கருத்தை, காங்கிரசுத் தலைவர்கள் வாய்மூடிக் கிடந்ததன் மூலம் உருவாக்கியுள்ளனர். 'வன்முறையைத் தூண்டிவிட்டவர்களால், வன்முறையை எவ்வாறு கண்டித்திட இயலும்' என்றுகூட இவர்களின் வாய் திறவாமையைக் கண்டு பலர் ஐயம் கொள்ளக்கூடும்.

அண்ணாவின் சிலை எப்படி வைக்கப்பட்டது—அதற்கான செலவை ஏற்றுக்கொண்டவர் எவர் என்பது பற்றிய உண்மைகளைத் தெரிந்துகொள்ளாமல், வரிப் பணத்திலிருந்துதான் அண்ணாவின் சிலை வைக்கப்பட்டிருப்பதாக முடிவு கட்டிக்கொண்டு, 'அண்ணாவுக்குச் சிலை வைத்தது நியாயமா ?' எனக் கேட்டிருக்கின்றார்—சுப்பிரமணியம்.

மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், தமது சொந்தச் செலவில் அண்ணாவின் சிலையைச் செய்திருக்கின்றார். அண்ணா அவர்களின் விருப்பத்துக்கு மாறாக, அண்ணாவின் சிலையை வைத்திட அமைச்சர் கருணாநிதி அவர்கள் முனைந்து ஏற்பாடு செய்திருக்கின்றார். இதுதான், அண்ணாவின் சிலை பற்றிய முழு உண்மையாகும்.

ஒரு கட்சி சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்திடவும், காங்கிரசு ஏதேச்சாதிகார ஆட்சியில் சிக்குண்டு நாடு வீழ்ச்சியுற்றுப்போவதை தடுத்திடவும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமது அரிய உழைப்பாலும், அறிவாற்றலாலும் கழகம் கண்டு --- மக்களாட்சி முறைக்குப் புத்துயிரூட்டிய அறிஞர் அண்ணா அவர்களுக்கு—அவர் செய்துவரும் பணிக்காக அவரைப் பாராட்டும் வகையில்—அவருக்கு வெண்கலத்தால் ஆக்கப்பட்ட சிலை அமைப்பதும், அதற்காகச் சிறு தொகையை வரிப் பணத்திலிருந்து செலவு செய்வதும் ஏன் நியாயமல்ல ? ஏற்பட்டுவிடக்கூடிய முறைகேடு என்ன ? வழக்குரைஞரான சுப்பிரமணியம் அவர்களுக்கு இந்த நியாயம் புரியாதா ? வாதத்திற்காகவே இதைக் குறிப்பிட்டோம்.

அண்ணா அவர்களுக்குச் சிலை வைக்கப்பட்டிருப்பதே காங்கிரசுத் தலைவருக்கு வெறுப்பாக இருக்கிறது. குறிப்பிடத்தக்க இலட்சியம் எதுவும் அவர் வெறுப்பில் அடங்கி இருக்கவில்லை. அரசியல் பகையும் அழுக்காறும்தான் சுப்பிரமணியம் அவர்களின் வெறுப்புக்குக் காரணமாகும்.

தமது உள்ளத்தில் புகைந்துகொண்டிருக்கின்ற பகையையும் அழுக்காற்றையும் அவரால் வெளியில் காட்டிக்கொள்ள முடியாது. அதற்காகத்தான், 'வரிப் பணம்' என்ற பொருளை குரங்குப் பிடியாகப் பற்றிக்கொண்டு, 'அண்ணாவுக்குச் சிலை வைத்திருப்பது நியாயமா ?' என்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார் தமிழகக் காங்கிரசுத் தலைவர் !

'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும்' என்பார்கள். அதைப்போல், காங்கிரசுத் தலைவரே, 'சிலை வைத்திருப்பது நியாயமல்ல என முடிவுகட்டிக்கொண்டுள்ளார் ; எனவே, நியாயமற்றது எனத் தலைவரால் முடிவுகட்டப்பட்டுவிட்ட சிலையை, உருக் குலைக்காமல்விடுவதா ?' எனச் சீடர்கள் தீர்மானித்துக் கொண்டுவிட்டதிலும், அண்ணாவின் சிலையை நோக்கி ஆவேசமாக ஓடியதிலும் வேதனைக்கு இடமிருந்[illegible]போதிலும் வியப்புக்கு இடமேது ?

'காமராசருக்கு சிலை வைக்க வேண்டும்' என்ற தீர்மானத்தை, மாநகராட்சியின் பொறுப்பை ஏற்றிருந்த கழகம் முழுமனதுடன் ஆதரித்து நிறைவேற்றிவைத்தது. வரிப் பணத்தில் சிலையையும் செய்து, காலஞ்சென்ற தலைமையமைச்சர் பண்டித நேரு அவர்களைக் கொண்டு திறப்பு விழாவும் செய்தது.

அந்தப் பகுதியிலிருந்து பலமுறை கழகம், ஊர்வலம் நடத்தி இருக்கிறது. அப்பகுதியில் கழக ஊர்வலங்கள் சென்றும் உள்ளன. பல்லாயிரக்கணக்கானவர்கள் அவ்வூர்வலங்களில் சென்றுள்ளனர். காமராசர் சிலை, அவர்களுக்கு ஆத்திரத்தை மூட்டியதில்லை. சிலையைக் கண்டதும், ஒருவருக்குக்கூட ஆவேசம் வந்தது கிடையாது.

காங்கிரசார் பெற்றுள்ள அரசியல் பண்பு முதற்கண் விளக்கப்பட்டிருக்கிறது. கழகத்தவர் பண்பு, இரண்டாவதாகத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பண்புடன் இந்தப் பண்பை ஒப்பவைத்துப் பார்த்து, 'எந்தப் பண்பு தேவையான பண்பு, என்பதைப் பொது மக்களே முடிவு கட்டிக்கொள்ளட்டும்.

—கா. க.

# இந்திய அரசின் காலங்கடந்த நடவடிக்கை!

## 'இந்தி எண்களைப் பயன்படுத்த வேண்டாம்' என உபதேசம்!

புதுடில்லி, மே 10—

"மத்திய அரசின் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் இந்தி தட்டச்சுப்பொறி (டைப்ரைட்டர்)களில், சர்வ்தேச எண்களையே பயன்படுத்தவேண்டும்" என்று மத்திய உள்துறையமைச்சு தெரிவித்துள்ளது.

உள்துறையமைச்சு அனுப்பியுள்ள சுற்றறிக்கை யொன்றில், 'அரசியல் சட்டம் 343 (1) பிரிவுப்படி இந்தியாவில் புழக்கத்தில் உள்ள சர்வ தேச எண்களையே பயன்படுத்த வேண்டும்' என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்கனவே வாங்கப்பட்டுள்ள இந்தித் தட்டச்சுப்பொறிகளில் இந்தி எண்களே இருக்கின்றன என்றும், இப்போது வாங்கப்படும் புதிய இந்தித் தட்டச்சுப்பொறிகளில் சர்வதேச எண்கள் உள்ளதாகவும் அந்தச் சுற்றறிக்கை கூறுகிறது.

பழைய தட்டச்சுப்பொறிகளில் உள்ள இந்தி எண்களை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதில் சர்வ தேச எண்களைப் பொருத்திக்கொள்ள முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கூடிய விரைவில் இதற்கு ஆவன செய்யுமாறு நிதித்துறை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

## நகரும் கால்நடை மருந்தகம்

கால்நடைகளுக்குச் சிகிச்சையளிக்க உதவியாக நடமாடும் மருந்தகம் ஒன்றை பிரிட்டிஷ் நிறுவனம் தயாரித்துள்ளது.

மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்ல முடியாத ஆடு, மாடுகளுக்குச் சிகிச்சை செய்ய இந்த நடமாடும் மருந்தகம் பெரிதும் பயன்படும்.

கால்நடைகளுக்கு வரும் எல்லா விதமான நோய்களுக்கும் தேவையான மருந்துகளும், இன்னும் அறுவைச் சிகிச்சை தேவையென்றால் அதற்கான கருவிகளும் இதில் அடங்கியுள்ளன.

500 மைல்கள் வரை வாகனத்தைச் செலுத்துவதற்கான எரிபொருள் நிரப்பி வைக்கப்பட்டுள்ளது.

வாகனத்துடன் வரும் கால்நடை மருத்துவர் தங்கவும் அதிலேயே வசதி செய்யப்பட்டுள்ளது.

# சுருங்கிவரும் பிரிட்டிஷ் பேரரசு!

## சுதந்தரம் பெறும் நாடுகளின் எண்ணிக்கை வளருகிறது

ஒருகாலத்தில் சூரியன் மறையாத மாபெரும் பேரரசுக்கு அதிபதியாக இருந்த பெருமை பிரிட்டனுக்கு உண்டு. ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இந்நிலை மாறத் தொடங்கியது. அதுவும் குறிப்பாக இந்தியா சுதந்தரமடைந்த பிறகு, உலகெங்கும் சுதந்தர உணர்வு தலைதூக்கத் துவங்கியது. உலகின் இந்தப் போக்கை நன்கு உணர்ந்த பிரிட்டன், படிப்படியாகத் தன் ஆதிக்கத்தில் இருந்த நாடுகளுக்கெல்லாம் சுதந்தரம் வழங்கிவருகிறது.

இந்தியாவைத் தொடர்ந்து உலகின் பல பாகங்களிலும் உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 70 கோடி மக்களுக்கு பிரிட்டன் சுதந்தரம் வழங்கியுள்ளது. அதுவும், அந்தந்த நாட்டு மக்களின் விருப்பத்தை அறிந்து, தன் காலில் தானே நிற்கும் தகுதியை அவை பெற்றிருந்தால், உடனே அவைகளுக்குச் சுதந்தரம் வழங்கிவந்துள்ளது பிரிட்டன்.

அண்மைக் காலத்தில் காமன் வெல்த்தில் சேர்ந்துள்ள பல நாடுகளும், இப்படி மிகக் குறுகிய காலத்தில் சுதந்தரம் பெற்றவைதாம்.

இன்னும் கூறப்போனால், அதிக நாடுகளுக்கு—பெரும் எண்ணிக்கையுள்ள மக்களுக்கு—மிகக் குறுகிய காலத்தில் சுதந்தரம் வழங்கியதை பிரிட்டன் ஒரு சாதனையாகவே கருதிப் பெருமை கொள்வதிலும் நியாயமிருக்கிறது.

இந்த ஆண்டில், இதுவரை தெற்கு அரேபியா (இப்போது தெற்கு யேமன் குடியரசு என அழைக்கப்படுகிறது), மொரிஷியஸ் ஆகிய இரு நாடுகளுக்கும் பிரிட்டன் சுதந்தரம் வழங்கியுள்ளது. வரும் செப்டம்பரில் 'ஸ்லாசிலாந்தி'ற்கு சுதந்தரம் வழங்கவும் பிரிட்டன் இசைந்துள்ளது. அதுவும் முடிந்துவிட்டால், ஆப்பிரிக்கா கண்டம் முழுவதும்—ரொடீஷியா நீங்கலாக — பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபட்டுவிடும்!

ஸ்லாசிலாந்தைத் தொடர்ந்து இன்னும் பிரிட்டிஷ் நிர்வாகத்தில் சுமார் 20 நாடுகள் உள்ளன. ஆனாலும், இவற்றில் முதன் முதல் சுதந்தரம் பெறும் வாய்ப்பு பிரிட்டிஷ் ஹோண்டுராவிற்குத்தான்.

இதில் மிகவும் வியப்புக்குரிய நிலைமை என்னவென்றால், மற்ற நாடுகள், 'சுதந்தரம் வேண்டாம்; நாங்கள் பிரிட்டிஷ் நிர்வாகத்தின்கீழேயே வசதியாக வாழ்கிறோம்; இப்படியே இருக்க விரும்புகிறோம்' என்று கூறுவதுதான்!

ரொடீஷியாவைப் பொறுத்தவரையில், தற்போது அங்கு நடைபெறும் சட்டபூர்வமில்லாத ஆட்சியின் முடிவுக்குப் பிறகுதான் அதற்கு ஒரு நல்ல எதிர்காலம் அமையும்.

ஜிப்ரால்டரைப் பொறுத்தவரையில், பிரிட்டிஷ் நிர்வாகத்தில் இருக்க விரும்புவதை அந்நாட்டு மக்கள் வாக்கெடுப்பில் தெளிவாகத் தெரிவித்துவிட்டார்கள். எப்படியிருப்பினும், பிரிட்டனிடமிருந்து விடுபட்டு வேறு ஒரு வெளிநாட்டின் பிடியில் செல்வதை அறவே விரும்பவில்லை என்பதை அம்மக்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

சுதந்தரம் வழங்குவதில் பிரிட்டனுக்கு உள்ள ஒரு பிரச்சினை என்னவென்றால், 'அட்லாண்டிக்—பசிபிக்—இந்து மகாசமுத்திரங்களில் அங்கங்கே சிற்றூர்கள் போலப் பரவிக் கிடக்கும் தீவுகளை எப்படி ஒருங்கிணைத்து அரசியல் சாசனத்தை உருவாக்குவது' என்பதுதான்.

மக்கட் தொகை மிகுந்துள்ள ஹாங்காங்கிலிருந்து எழுபதே மக்கள் வசிக்கும் மிகச் சிறு தீவு வரை இப்படி ஏராளமாக இருக்கின்றன. இவற்றில் பெரும்பாலனவை, தனித்து வாழ இயலாதவை—இதனை அவைகளே ஒப்புக்கொண்டுள்ளன.

ஒவ்வொரு தீவு நாடும் தன்னுள்ளே நூற்றுக்கணக்கான சிறு சிறு—தனித் தனி—தீவுகளைக் கொண்டுள்ளது.

உதாரணமாகப் பிஜித் தீவை எடுத்துக்கொண்டால், அதன் வசமுள்ள மொத்த குட்டித் தீவுகளின் எண்ணிக்கை 840; ஆனால், இவற்றில் சுமார் 200 தீவுகளில்தான் மக்கள்—அதுவும் குறைந்த எண்ணிக்கையில்—வாழ்கின்றனர்.

இந்து மகா சமுத்திரத்திலுள்ள சிசிலித் தீவை எடுத்துக்கொண்டால் இதன் வசம் 90 குட்டித் தீவுகள் அடங்கியுள்ளன.

இத்தனைச் சிறு தீவுகளையும் திருப்திப்படுத்தும் அளவிற்கு சுதந்தரம் வழங்குவதென்றால், அதற்கான பேச்சுவார்த்தைகள் எவ்வளவு சிக்கல் நிறைந்தது எனச் சொல்லத் தேவையில்லை.

இன்னொரு உதாரணம் மிக விந்தையானது; பிஜியின் நிர்வாகத்தின்கீழ் உள்ள ஒரு தீவு—பெயர் பிட்காரின்—உள்நாட்டுச் சுயாட்சி உரிமை பெற்றுத் தனது நிர்வாகத்தைத் தானே கவனித்து வருகிறது.

இந்தத் தனி நாட்டின் மக்கள் தொகை என்ன தெரியுமா ?—எழுபது! ஆம்; ஒரு நூறுக்கு முப்பது குறைவு!

## தேர்தல் முறை

பிரிட்டனிடம் இருந்துவரும் இந்நாடுகளிலெல்லாம், பிரிட்டன் நியமிக்கும் கவர்னர் ஒருவர் நாட்டின் தலைவராக இருக்கிறாரே தவிர, நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், அந்தந்த நாட்டு மக்களே அதற்கானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். தேர்தல் முறை இவை அனைத்திலும் இருந்து வருகிறது. எழுபதே மனிதர்கள் வாழும் பிட்காரின் தீவுகூட தேர்தலை நடத்தி, ஒரு கௌன்சிலை அமைத்து நிர்வாகத்தை அந்தக் கவுன்சிலிடம் ஒப்படைத்துள்ளது.

இப்படியாகப் பிரிட்டன், தன் வசமுள்ள நாடுகளுக்கு—அவை பொறுப்பை ஏற்கும் தகுதியடைந்ததும்—படிப்படியாக சுதந்தரம் வழங்கிவருகிறது.

சுதந்தரம் வழங்கப் பிரிட்டன் தானே முன்வந்துள்ள நிலையிலும், சம்பந்தப்பட்ட நாடுகளின் விருப்பம் மாறாக இருப்பின், விடுதலை தள்ளிப் போடப்படுகிறது!

# ‘முத்தமிழால் குறள் நெறியைப் பரப்புவீர்— கோட்டையிலே தமிழ் மணம் கமழச் செய்வீர்’

## அமைச்சர்கள் மு. கருணாநிதி—மா. முத்துசாமி வேண்டுகோள்

சென்னை, மே 10—

“திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களையும் இசையோடு பாடவும், குறள் கூறும் கருத்துக்களை ஓரங்க நாடகங்கள் வாயிலாகப் பரப்பவும், குறள் மணத்தை எங்தெந்தத் துறையில்—எப்படியெப்படி கமழச் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்யவும் முன்வர வேண்டும்”

என்று பொதுப்பணித்துறை யமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், நேற்று சென்னைக் கோட்டையில் நடந்த முத்தமிழ் மன்றத் துவக்க விழாவில் பேசுகையில் வலியுறுத்தினர்.

தமிழக அரசின் தலைமைச் செயலக ஊழியர்கள் நிறுவியுள்ள இம் முத்தமிழ் மன்றத்தின் துவக்க விழாவுக்கு அமைச்சர் கருணாநிதி தலைமை தாங்கினர்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி, சுக தாரத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் திரு. எம். ஆர். பெருமாள் முதலியார், நடிப்பிசைப புலவர் கே. ஆர் இராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கோட்டையில் உள்ள படை அணிவகுப்புத் திடலில் இந்த விழா நடைபெற்றது.

மன்றத் தலைவர் திரு. கோ. முத்துப் பிள்ளை அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

திரு. சா. கஜேந்திரன் பிஏ அறிக்கை வாசித்தார்.

துவக்கத்தில் இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் தமிழ் வாழ்த்துப் பாடினர்.

இறுதியில் திரு. ஆ. கண்ணப்பன் நன்றி கூறினர்.

அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“எனக்குமுன் பேசிய அமைச்சர் முத்துசாமி அவர்கள், ‘தலைமைச் செயலகத்தில் எல்லா அரசு அலுவல்களும் தமிழிலேயே நடக்கவேண்டும்’ என்று வலியுறுத்தினர்.

கோட்டையில் தமிழ் கொஞ்ச வேண்டும்—தமிழ்மொழி எழுச்சி பெற வேண்டும் என்ற அவருடைய கோரிக்கையை எல்லா ஊழியர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன்.

‘தலைமைச் செயலகத்தில் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே இருக்கும்’ என்ற நிலையை நீங்கள் ஏற்படுத்திவிட்டால், அந்த நிலையைப் பிறகு தமிழகம் முழுவதிலும் ஏற்படுத்திவிட முடியும்.

எந்த மொழியிலும் இல்லாத இலக்கிய—நீதி நூலான திருக்குறள், நம் தமிழ் மொழியில் இருக்கிறது. ‘குறள் மணம் கமழாத இடமே தமிழகத்தில் இல்லை’ எனும் நிலையை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும்.”

### அமைச்சர் முத்துசாமி

அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் பேசுகையில் சுட்டிக் காட்டியதாவது :—

“‘தமிழக அரசு’ என்றும், ‘தமிழக அரசுப் போக்குவரத்து’ என்றும் பெயர் வைத்திருக்கிறோம்; இந்தப் பெயர் சூட்டப்பட்டதனால் மட்டுமே தமிழை முழுமையாக வளர்த்துவிட்டதாகக் கூறமுடியாது. தமிழக அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் தமிழிலேயே நடைபெற வேண்டும்.

தற்போது தலைமைச் செயலகத்தில், தமிழுக்கும்—ஆங்கிலத்துக்கும், ‘சக்களத்திப் போராட்டம்’ நடக்கிறது. நான், ‘பைல்’களில் தமிழில் குறிப்பெழுதி கையெழுத்திட்டு அனுப்பினல் அது ஆங்கிலத்தில் குறிப்பெழுதப்பட்டு மீண்டும் எனக்குத் திரும்பி வருகிறது; இந்த நிலை மாறவேண்டும்.

எல்லாம் தமிழிலேயே இருக்கத் தக்க அளவுக்குத் தலைமைச் செயலக ஊழியர்களுக்குத் தமிழ் உணர்ச்சி வரவேண்டும். நாளை முதலே தலைமைச் செயலகத்தில் எல்லா நடவடிக்கைகளையும் தமிழில் நடத்த நீங்கள் உறுதிகொள்ள வேண்டும்.

ஊழியர்கள் ஒவ்வொரு மாதமும் ஊதியம் வாங்கும்போது ஒரு தமிழ் நூலை வாங்குவது என்று உறுதி பூண்டால் தமிழில் புதுப் புது நூல்களை வல்லுநர்கள் இயற்றிக் கொடுக்கத் தூண்டுகோலாக அமையும்.

# இலங்கை அகதிகட்கு மறுவாழ்வு

## மைசூரில் குடியமர்த்த இந்திய அரசு ஏற்பாடு

புதுடில்லி, மே 9—

இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் இவ்வாண்டு சனவரித் திங்கள் இறுதிவரையில் மொத்தம் 4,751 இந்தியர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் இத்தகவலை துணை அமைச்சர் டி. ஆர். சவான் தெரிவித்தார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

“இலங்கையிலிருந்து திரும்பி வருகிறவர்களுக்கு வேலை தேடித் தரும் நிறுவனங்கள்மூலம் மத்திய அரசில் வேலைவாய்ப்பு அளிப்பதற்கு முதலிடம் தரப்பட்டுள்ளது; இவ்வகையில் அவர்களுக்கு உதவ சென்னையிலும், விசாகையிலும் தொடர்பு அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

“இலங்கையிலிருந்து திரும்பும் தோட்டத் தொழிலாளருக்குத் தென்னிந்தியத் தோட்ட ஐக்கிய முதலாளிகள் சங்கத்தின்மூலம் வேலையளிக்கும் வாய்ப்புப்பற்றியும் ஆராயப்பட்டுவருகின்றன.

தமிழகம், மைசூர் மாநிலங்களில் புதிய தேயிலை, ரப்பர், காபித் தோட்டங்கள் அமைக்கும் திட்டங்களும் பரிசீலனையில் இருக்கின்றன.

“மைசூரில் 5,000 ஏக்கர் பயிரிடும் நிலங்களில் 1,000 குடும்பங்களைக் குடியமர்த்தும் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது; இதற்கு ஆகும் செலவு ரூ 97.80 இலட்சம்.

“இதேமாதிரி மைசூரிலேயே சூல்லியா மாவட்டத்தில, 8,000 ஏக்கரில் ஒரு ரப்பர் தோட்டமும் ஏற்படும்; இதில் சுமார் 2,650 பேருக்கு வேலை கிடைக்கும்.

“இந்தத் திட்டத்துக்கு ஆகும் செலவு மதிப்பீடு 2.75-கோடியாகும்.”

# செயற்கைக் கோள் மூலம் செய்தித் தொடர்பு

## இந்தியா—பிரிட்டன் இடையே தொடங்கும்

“இந்தியா செயற்கைக் கோள் மூலம் பிரிட்டனுடன் தந்தி, டெலிவிஷன் தொடர்பு கொள்வதற்கு விரைவிலேயே ஏற்பாடுகள் செய்யப்படும்”

என்று பிரிட்டிஷ் தலைமை அஞ்சல் நிலையம் இலண்டனில் அறிவித்துள்ளது.

இதற்கான வேலை 1969-ம் ஆண்டில் முடிவடையும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த வகையில் உதவும் செயற்கைக்கோள் ஒன்றை இந்துமாக் கடலுக்குமேல் செலுத்தி—நிரந்தரமாக அது வானத்திலேயே இருக்க வழி செய்து—பிறகு அதன் மூலம் செய்திப் போக்குவரத்துக்கான கருவிகள் இணைக்கப்படும். இதன் மூலம் இந்தியா மட்டுமல்லாமல், ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற தூரக்கிழக்கு நாடுகளும் பிரிட்டனுடன் தொடர்புகொள்ள முடியும்.

இந்தியாவில் விரைவில் பிரபலமடையவிருக்கும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளும் இதன் மூலம் அனுப்பவும்—பெறவும் இயலும்.

இந்தியாவிலிருந்து அனுப்பப் படும் செய்திகள் இந்தக் கோள் மூலம் பிரிட்டனுக்குச் செல்லும். அதேபோல அங்கிருந்து அனுப்பப்படுபவைகளும் இந்தியாவிற்கு இதன் மூலம் வந்தடையும்.

இந்தியச் செய்திகளைப் பெறுவதற்காக 4 இலட்சம் பவுன் செலவில் புதிய சாதனங்கள் பிரிட்டனில் பொருத்தப்படுகின்றன.

# உற்பத்திப் பெருக்கத்திற்கான கடன்கள் !

## உழவர்கட்கு இந்த ஆண்டு ரூ. 55 கோடி கிடைக்கும்

சென்னை, மே 11—

தமிழகத்தில் 1968 69-ல் ஆண்டில் நீண்ட கால—குறுகிய கால வேளாண்மைக் கடன்களாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 55 கோடிவரை வழங்கப்படவிருக்கிறது.

1967—68-ல் (கடந்த மார்ச் முடிய) இத்துறையில் ரூ. 36 68 கோடிதான் வழங்கப்பட்டது.

இந்தக் கடன்கள், ஏற்கனவே வேளாண்மைத் துறைச்கு வழக்கமாகக் கொடுக்கப்பட்டுவரும் கடன்களையல்லாமல், பல்வேறு உற்பத்திப் பெருக்கத் திட்டங்களின் கீழ் அதிகப்படியாகக் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படுகின்றன.

# தமிழக அரசின் உணவுப்பெருக்க நடவடிக்கை

## 120 நாள் பாசனத்துக்கு சாத்தனூர்த் தண்ணீர் !

வேலூர், மே 9—

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு, சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து இவ்வாண்டு ஜூன் முதல் • நாளிலிருந்து 120 நாட்களுக்குப் பாசனத்துக்கு தண்ணீர் விடப்படும்.

“ சிஓ-27’ அல்லது ‘ஏ.டி டி-27’ போன்ற அதிக விளைச்சல் தரும் நெல் வகைகளைப் பயிரிடவே இந்தத் தண்ணீரைப் பயன் படுத்த வேண்டும்; வேர்க் கடலை போன்ற மற்ற பயிர்களுக்குப் பயன்படுத்தக் கூடாது”

என்று, தென்னாற்காடு மாவட்ட கலெக்டர் அறிவித்துள்ளார்.

இந்த ஏற்பாட்டின்படி 19 கிராமங்கள் பாசன வசதி பெறும்.

விதைகள், உரம், பூச்சி மருந்துகள் வாங்க விவசாயிகளுக்குக் கடன்கள் வழங்கவும் ஏற்பாடாகி இருக்கிறது.


# தமிழக மின் குழு

## டெண்டர் அறிக்கை

கீழ்க்காணும் பொருள்களை வழங்குவதற்கான முத்திரையிட்ட தனித்தனி டெண்டர்கள் அடியிற் கையொப்பமிட்டவரால் பரமக்குடியில் உள்ள அவரது செயலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். மேற்கூறிய டெண்டர்கள் கீழே குறிப்பிட்டுள்ள முடிவு தேதிகளில் பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

| வரிசை எண் | சாற்றுக் குறிப்பு எண் | பொருள்களின் விவரமும் மற்றும் | முடிவு தேதி |
|---|---|---|---|
| 1. | டெண்டர் 1/68-69 | இரும்புக் கம்பிகளினல் செய்யப்பட்ட 24' 0" நீளமுள்ள கிரில் 700 வழங்குவது | 11-6-1968 |
| 2. | டெண்டர் 2/68-69 | தேக்கு மர மீட்டர் பலகைகள் 18"×12"—12000 வழங்குவது | 11-6-1968 |
| 3. | டெண்டர் 3/68-69 | 6000 தேக்கு மர மீட்டர் பலகைகள் 24"×18"-ம் 12000 தேக்கு மரப் பலகைகள் 18"×4" வழங்குவது | 11-6-1968 |
| 4. | டெண்டர் 4/68-69 | 400 யூனிட்டுகள் கருங்கல் ஜல்லி ½"×¾" வழங்குவது | 11-6-1968 |
| 5. | டெண்டர் 5/68-69 | 800 "பி" டைப் டிஸ்டிரிப்யூஷன் பெட்டிகள் வழங்குவது | 11-6-1968 |

டெண்டர் படிவங்களின் விலை, ஒவ்வொரு சாற்றுக் குறிப்புப் பிரதிக்கும் தனித் தனியே ரூ. 5·15 (3 சதவிகித வரி உள்பட) ஆகும்.

மேற்படி சாற்றுக் குறிப்புப் பிரதிகள் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூ. 5·15 விதம் ‘தலைமைக் கணக்கர், இராமநாதபுரம் மின் திட்டம், கோ. புதூர், மதுரை-7’ என்ற முகவரிக்குப் பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இந்த ரூ. 5·15 எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. பண அஞ்சல் மூலம் இத்தொகையை அனுப்புவோர், தமது முகவரியையும் தேவையான பிரதிக்குரிய சாற்று எண் குறிப்பையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலம்தான் அனுப்பப்படும். அவை உரியவர்க்குச் சரியாகப் பட்டுவாடா செய்யாமலிருந்தால் அதற்கு மின் குழு பொறுப்பல்ல.

குறைந்தபட்ச விலை குறித்த டெண்டர்தான் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது நிபந்தனையல்ல. கீழே கையொப்பமிட்டவர், எந்த ஒரு டெண்டரையோ அல்லது அத்தனை டெண்டர்களையுமோ காரணம் ஏதும் காட்டாமல் நிராகரிக்கவும், 2 அல்லது மேற்பட்ட டெண்டர்தாரர்களுக்கிடையே ஆணையை (order) பகிர்ந்து கொடுக்கவும் உரிமை பெற்றவர் ஆவார். சாற்றுக் குறிப்புப் பிரதிகள் மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல குறித்த காலத்திலும், தேதியிலும் வராத டெண்டர்கள் நிராகரிக்கப்படும்.

ஒவ்வொரு சாற்று எண் குறிப்பிற்கும் குறிப்பிட்ட ஒரு தொகை டேவணித் தொகையாகக் கட்ட வேண்டும். மேற்படி டேவணித் தொகை டெண்டருடன் கூடவே கண்டிப்பாக அனுப்ப வேண்டும். டேவணித் தொகை கட்டாத டெண்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவை கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

டெண்டர்கள் 11—6—1968 அன்று பிற்பகல் 4 மணிக்கு பரமக்குடி செயலகத்தில் பரிசீலிக்கப்படும்.

**மேற்பார்வை மின் பொறியாளர்,**
இராமநாதபுரம் மின் அமைப்பு, பரமக்குடி


# தமிழகத்தில் நவீன அரிசி ஆலைகள்

சென்னை, மே 9—

வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாற்றிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, திருவையாறு ஆகிய இரு இடங்களிலும் மூன்று நவீன அரிசி ஆலைகளை நிறுவத் தமிழக சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

இத்துடன்கூட, மேலும் 5 நவீன அரிசி ஆலைகளை நிறுவவும் அரசு உத்தேசித்திருக்கிறது. மதுரை—இராமநாதபுரம்—திருநெல்வேலி பகுதியில் ஒன்றும், கும்பகோணம்—லால்குடி, மன்னார்குடி—கள்ளக்குறிச்சி ஆகியவற்றில் நான்கும் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கின்றன.

இவை அனைத்தும் கூட்டுறவு துறையில் இருக்கும்.

உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் இவ்விவரத்தை அறிவித்தார்.

இந்திய உணவுக் கட்டுப்பாட்டுக் கழகம், தமிழ்நாட்டில் 5 அரிசி ஆலைகளைத் துவக்கத் திட்டமிட்டிருக்கிறது. ஆலைகளை நிறுவுவதற்கான இடங்கள் மாநில அரசைக் கலந்தாலோசித்துத் தீர்மானிக்கப்படும்.

நவீன அரிசி ஆலைகள் 70-லிருந்து 75 சதவிகிதம்வரை அரிசி தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அதாவது, சாதாரண ஆலைகள் தருவதைக் காட்டிலும் 10 சதவிகிதம் அதிகம்.

# தென்னகப் பொதுப் போலீசுப் படை

## 4 மாநில அதிகாரிகள் விவாதம்

உதகை, மே 10—

தென் வட்டாரப் போலீசுப் படையின் பணிகள்பற்றி தமிழக — ஆந்திர — கேரள — கருநாடக மாநிலங்களின் காவல் துறைத் தலைமை அதிகாரிகள் (ஐ.ஜி.) இங்கு கூடி விரிவாக விவாதித்தனர்.

“ஒவ்வொரு மாநிலமும் இரண்டு கம்பெனிக்கு மேற்பட்டவர்களை மற்ற மாநிலங்களுக்குத் தேவைப்படும்போது அனுப்பிவைக்க முயற்சி செய்யவேண்டும்” என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது (ஒவ்வொரு கம்பெனியிலும் அதிகாரிகள் உட்பட 129-பேர் இருப்பர்).

மதுவிலக்கைச் செயல்படுத்துவதில் எல்லைப் பகுதியில் ஏற்படும் சிக்கல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.


# தமிழக மின் குழு

## குத்தகை விளம்பர அறிக்கை

“திருநெல்வேலி மின் அமைப்பு—களக்காடு துணை மின் நிலையம்—குடியிருப்பு மற்றும் குடியிருப்பல்லாத கட்டிடங்கள் கட்டுதல்” என்பதுடன் தர விபர எண்ணிக்கை (ஸ்பெசிபிகேஷன் எண்) C 1041, குத்தகைக்காரரின் பெயர் ஆகியவற்றையும் மேல் உறையில் எழுதி முத்திரை செய்த குத்தகை விபரங்கள் கீழ்க் கண்ட வேலைகளுக்காக, கீழ்க் கையொப்பமிட்டவரால் 22—6—’68 பிற்பகல் 4 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

1) “2 எப்” வகைக் கட்டிடம் — ஓர் அமைப்பு
2) வண்டி நிறுத்தும் கட்டிடம் — ஓர் அமைப்பு

மேற்கண்ட வேலைகளுக்கான எல்லா தர விபரங்களும் வரைபடங்களும் வேண்டுவோர் ஒரு நகலுக்கு விற்பனை வரி உற்பட ரூ. 20 (ரூபாய் இருபது) மட்டும்; குத்தகை விபர அறிக்கை, அட்டவணை மட்டும் வேண்டுவோர் நகல் ஒன்றுக்கு ரூ. 5 (ரூபாய் ஐந்து) மட்டும் செலுத்திக் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

இலாகா நமூனவில் எழுதாத குத்தகை விபரங்களும். உரிய தேதி - காலம் தவறி வரும் குத்தகை விபரங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கீழ்க் கையொப்பமிட்டவர், வேலைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட அல்லது எல்லா குத்தகை விபரங்களையும் காரணம் கூறாமல் நிராகரிப்பதற்கும் உரிமை பெற்றவராவார்.

**மேற்பார்வை மின் பொறியாளர்,**
திருநெல்வேலி மின் அமைப்பு,
திருநெல்வேலி-3

வேளாண்மைத்துறை அமைச்சர்

## ஏ. கோவிந்தசாமி உடல் நிலை

சென்னை, மே 11—

உடல் நலக் குறைவு காரணமாக சென்னைப் பெரிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வேளாண்மைத்துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் உடல்நிலை தேறி வருகிறது.

மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவர் இன்னும் சிறிதுகாலம் மருத்துவமனையில் தங்கியிருப்பார்.

நேற்று அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும் மருத்துவமனைக்குச் சென்று, அவரது உடல்நலம் பற்றி விசாரித்தனர்.

## எண்ணெய்--பருப்பு விலைகள் குறைந்ததன் விளைவு

### ஓட்டல்காரர்கள் முடிவு

சென்னை, மே 10—

எண்ணெய் வகைகள், பருப்பு வகைகளின் விலைகள் குறைந்திருக்கின்றன; அரிசியும் அதிக அளவில் கிடைக்கிறது; இதன் பலனாக நகர காப்பி ஓட்டல்காரர்கள், பண்டங்களின் விலைகளைக் குறைக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

இரண்டு நாட்களாக ஓட்டல்காரர்கள்—ஒன்றன் பின் ஒன்றாக—பஜ்ஜி, போண்டா, போன்றவற்றின் விலைகளைக் குறைத்திருக்கிறார்கள்.

இதுவரையில், தென் சென்னையிலுள்ள ஓட்டல்களில் மட்டுமே விலைகள் இறங்கி இருக்கின்றன.

சில ஓட்டல்கள் ஐந்து காசுகள் குறைத்திருக்கின்றன; சில ஓட்டல்கள் மூன்று காசுகள்தான் குறைத்திருக்கின்றன.

இட்டிலி, தோசை போன்ற அரிசியால் தயாரிக்கப்படும் பண்டங்களின் விலைகளைக் குறைப்பதில்லை என்றும், ஆனால் இன்னும் கொஞ்சம் பெரிய அளவில் இவற்றைத் தயாரிப்பதென்றும் முடிவு செய்துள்ளன.

வட சென்னை ஓட்டல்களும் இன்னும் சில நாட்களில் விலைகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை ஓட்டல் சொந்தக்காரர்கள் சங்கத்தின் இரு கூட்டங்கள், ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றபோது, இதுபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு ஓட்டலும் அதனதன் தகுதிக்குத் தகுந்தபடி விலையைக் குறைக்க வேண்டுமென்று அந்தத் தீர்மானம் கேட்டுக்கொண்டது; அதைத் தொடர்ந்து விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

காரமுள்ள பொருள்களின் விலைகள் மட்டும்தான் குறைக்கப்பட்டிருக்கின்றன. காப்பி, டீ, மற்ற பானங்களின் விலைகளோ, சாப்பாட்டின் விலையோ குறைக்கப்படவில்லை.

## விமான நிலையத்தில் நுழைய அனுமதிச் சீட்டு

அறிஞர் அண்ணா அவர்களை வரவேற்க பல்லாயிரக்கணக்கானோர் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் திரளுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விமான நிலையத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கே இடவசதி இருப்பதால், அதிகாரிகள், சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

முன்பு அண்ணா அவர்களை வழியனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது போலவே இப்போதும், அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களை மட்டுமே அனுமதிக்க முடிவுசெய்துள்ளனர்.

இதற்கான அனுமதிச் சீட்டுகளை, மவுண்ட் ரோடு அரசினர் மாளிகையில் உள்ள மாநில அரசின் தகவல் நிலையத்தில், இதற்கென நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

## மாணவர்கள் வரவேற்பு

உலகப் பயணம் செய்து திரும்பும் அண்ணா அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பளிக்க மாணவர்கள் முடிவு செய்துள்ளனர்.

12-ம் நாள் மாலை 6-மணிக்கு அண்ணா சிலைக்கு மாலையணிவித்து விமான நிலையம் சென்று அண்ணா அவர்களுக்கு வரவேற்பளிப்பர்.

13-ம் நாள் அண்ணா வரவேற்பு ஊர்வலத்திலும் மாணவர்கள் பெரும் அளவில் கலந்து கொள்வர்.

# 'பயனில' சொல்லிப் 'பதடி'யாகாதீர்!

## சுப்பிரமணியத்துக்கு இடித்துரை

சென்னை, மே 11—

"தமிழகம் எத்தனையோ பேர்களை—எந்தெந்த வேலைகளுக்கோ தந்திருக்கிறது; சிலரை, எந்த வேலைக்குமே தகுதியில்லாமல் தந்திருக்கிறது; சிலரை, 'எதற்குப் பிறந்தோம்' என்று அவர்களுக்கே புரியாதவிதத்தில் தந்திருக்கிறது; ஒரு சிலரைத்தான் உலகுக்கே தந்திருக்கிறது!

"எல்லா வகையினரும்—எல்லா வழியினரும்—எல்லாப் பகுப்பினரும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் குறள் யாத்த வள்ளுவரைத் தந்த தமிழகம், இன்று அண்ணாவைத் தந்திருக்கிறது!

"வள்ளுவர் மிக அழகாகச் சொல்லுகிறார்—'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்று! அது, சி. சுப்பிரமணியமாக இருந்தாலும் சரி—காமராசராக இருந்தாலும் சரி—பக்தவத்சலமாக இருந்தாலும் சரி—அவர்கள் பேசுவதில் உண்மை என்னவென்று பார்க்கவேண்டும்.

"உண்மை இல்லாவிட்டாலும், சுப்பிரமணியம் அவர்கள் பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. 'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச் சொல்' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். 'நான் அப்படித்தான் பயனற்ற சொல்லைச் சொல்லுவேன்' என்றால், அதற்கும் வள்ளுவர், 'பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்—மக்கட் பதடியெனல்' என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் சுப்பிரமணியம் அறிந்திருப்பார் என்று நினைக்கிறேன்.

"அவர் பொறுப்புவாய்ந்த அரசியல் தலைவராக—அமைச்சராக அமெரிக்கா சென்று திரும்பியவர்! அப்படிப்பட்டவர், அண்ணாவைப் பார்த்து, 'அண்ணாதுரையே! நீங்கள் உண்மையான சனநாயகவாதியாக இருந்தால் தென்காசித் தொகுதியில் நிற்க முடியுமா' என்று சவால் விடுகிறார்!

"யார், யாருக்குச் சவால் விடுகிறார்?—தென் சென்னைத் தொகுதியில் 86-ஆயிரம் வாக்கு வேறுபாட்டில் காங்கிரசை வீழ்த்திய அண்ணாவுக்கு, கோபிசெட்டிப்பாளையத்தில் தோழர் சாமிநாதனிடம் ஒரு இலட்சம் வாக்குகள் வேறுபாட்டில் தோல்வியுற்று ஓடிய சுப்பிரமணியம் சவால் விடுகிறார்!

"பொள்ளாச்சித் தொகுதியில் உடுமலை நாராயணன் நிற்கிறார்—என்று கேள்விப்பட்டதும், முன்பு தாம் வெற்றி பெற்ற அதே பொள்ளாச்சித் தொகுதியில் நிற்கப் பயந்து ஓடிய சுப்பிரமணியம்தான், அண்ணாவுக்குச் சவால் விடுகிறார்!

"'எங்கே நின்றாலும், சி. சுப்பிரமணியத்தைத் தோற்கடிப்பேன்' என்று உடுமலை நாராயணன் அறிக்கை விட்டபோதுகூட, 'உடுமலை நாராயணன் என்ன? அந்த வைகுந்த நாராயணனே வந்தாலும் வெற்றி பெறுவேன்' என்று மார்தட்டியவர்தான் சுப்பிரமணியம்—என்ன ஆனார்? அந்தத் தொகுதியை விட்டுவிட்டு, கோபிசெட்டிப் பாளையத்திற்கு ஓடிவிட்டார்!

"அங்கே புளியம்பட்டி சாமிநாதன் அவரை எதிர்த்தார். சாமிநாதனுக்குக்கூட கொஞ்சம் பயம் இருந்தது—'அமைச்சராக இருந்தவராயிற்றே; இவரை வெல்ல முடியுமா?' என்று! பிறகுதான் தெரிந்தது 'சுப்பிரமணியத்தைத் தோற்கடிக்க தன்னைப் போன்ற ஆள் கூடத் தேவையில்லை; சாதாரணத் தொண்டனே போதும்' என்பது!

"அப்படிப்பட்ட சுப்பிரமணியம்தான் கூறுகிறார்—'அண்ணா பதவிக்கு வந்தது கொல்லைப்புற வழியாக' என்று!

ஆறு தொகுதி மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும்—மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் அண்ணா பதவிக்கு வந்தது கொல்லைப்புற வழியென்றால், டாக்டர் இலட்சுமணசாமி, இராஜா சர் முத்தையா, மாணிக்கவேலர் போன்றவர் வந்தது கொல்லைப்புறவழியா? மேலவை உறுப்பினர்களாக இருக்கும் 78 பேரும் கொல்லைப்புற வழியில் வந்தவர்களா?

"நேர்வழி, கொல்லைப்புற வழி—என்று சனநாயகத்தில் இரண்டு வழி வைத்திருக்கிறார்களா? அப்படி வைத்திருந்தால் அது அவர்கள் வைத்த வழியா நாங்கள் வகுத்த வழியா? படித்தறிந்த சுப்பிரமணியம் அவர்கள் இதற்கு விளக்கம் சொல்ல வேண்டாமா?

"வெங்கட்ராமன் 10 ஆண்டுகளாக இருந்தாரே—அவரும் கொல்லைப்புற வழியில் வந்தவர்தானா?

"சாதாரண மனிதன் இப்படிப்பட்ட வார்த்தையைச் சொல்லலாம்; பொறுப்புள்ள இடத்திலிருக்கும் சுப்பிரமணியம் சொல்லலாமா?

"சனநாயக நாட்டில் சனநாயகவாதிகள், 'நான் படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்பார்களா? இது யார் சொல்லுவது? காட்டு ராஜாவாக இருக்கும் சர்வாதிகாரி சொல்லும் வார்த்தை! அந்தச் சர்வாதிகாரி இப்போது என்ன ஆனார்?

"மக்கள் மன்றம் நினைத்தால்தான் எதுவும் செய்யலாம்! எங்களை இறக்கவோ, ஏற்றவோ மக்களால் முடியும்! ஆனால் காங்கிரசுக்காரர்களால் முடியாது!"

—கல்வி -- தொழில் அமைச்சர்

**இரா. நெடுஞ்செழியன்**

(சென்னை 96-வது வட்டக் கூட்டத்தில்)

# கழகத் தேர்தல்கள் ஒத்திவைப்பு

★

## நகர -- பெருநகரக் கிளைகள்; சென்னை வட்டக் கிளைகள் தேர்தல் நாள் ஒத்திவைப்பு

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நகர—பெருநகரக் கிளைகளின் தேர்தல்கள்,

**ஜூன் 8, 9 (சனி, ஞாயிறு)**

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அதேபோல்,

மே 18, 19 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சென்னை வட்டக் கிளைகளின் (டிவிஷன் கிளைகள்) தேர்தல்கள்

**ஜூன் 1, 2 (சனி, ஞாயிறு)**

ஆகிய நாட்களுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

அடுத்து வட்ட—மாவட்ட—தலைமைக் கழகத் தேர்தல்களுக்கான நாட்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும்.

அறிவகம்', சென்னை-13
10—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

# சவடால் வீரர் சுப்பிரமணியம் தயாரா?

"தென்காசித் தொகுதியைச் சொல்லி இன்னும் ஒரு மாத காலத்தை ஓட்டலாம் என்று, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் நினைக்கிறார்! 'அண்ணா போட்டியிடுவாரா' என்று—ஏதோ சனநாயகம் பேசிவிட்டதாக நினைத்துக்கொண்டு சவால் விடுகிறார்!

"தென்காசித் தொகுதி மக்களை வெகு நன்றாக நான் அறிவேன். வேண்டுமானால் தேர்தல் முடிவு வரும் வரையில், 'காங்கிரசு வெற்றி பெறும்' என்று சுப்பிரமணியம் சொல்லிக்கொண்டு இருக்கலாம்! ஆனால், அண்ணா அவர்கள் யாரை நிறுத்தப்போவதாக அறிவிக்கிறாரோ அவர்தான் மகோன்னத வெற்றி பெறுவார்!

"தென்காசியில் அண்ணா போட்டியிட வேண்டுமென்ற அவசியம் எதுவும் இப்போது எழவில்லை! மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத்தான் ஆட்சிப் பொறுப்பை அண்ணா ஏற்றிருக்கிறார்!

"சனநாயகத்தில் நம்பிக்கை இருக்குமானால்—'தி.மு. கழகத்தை மக்கள் ஆதரிக்கவில்லை' என்று சுப்பிரமணியம் சொல்வதில் உண்மை இருக்குமானால் — காங்கிரசு வளர்ச்சியில் அவருக்குத் தைரியம் இருந்தால்—சுப்பிரமணியம் அவர்களே தென்காசித் தொகுதியில் போட்டியிட வேண்டும்; இந்த அறைகூவலை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

**-கே.ஏ. மதியழகன்**

(சென்னை 96-வது வட்டக் கூட்டத்தில்)

# சிற்றூர்--பேரூர்; நகர உட்கிளை--பெருநகர உட்கிளைத் தேர்தல் முடிவு

சிற்றூர் - பேரூர்; நகர உட்கிளை—பெருநகர உட்கிளைத் தேர்தல்களின் முடிவுகள் 8—5—68-ஆம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் வகையில் அனுப்பப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சில மாவட்டங்களின் பெரும்பாலான தேர்தல் முடிவுகள், தலைமைக் கழகத்திற்கு இதுவரையில் வந்து சேரவில்லை.

ஆகவே, 13—5—68-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் அனுப்பப்பட வேண்டும் என்று இதன்மூலம் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

16—5—68-ம் நாளுக்குமேல் கிடைக்கும் தேர்தல் முடிவுகளோ, முடிவுகள் பற்றிய மற்ற விவரங்களோ தலைமைக் கழகத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறோம்.

— தலைமைக் கழகம் (தி.மு.க.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.